RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2447

OPEN ACCESS

# வைரமுத்து படைப்புகளில் பெண்ணியச் சிக்கல்கள்

அ. மோகன்ராஜ் [அ], ம. பிரதீப்குமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா

# Feminist issues in Vairamuthu's works

A. Mohanraj [a], M. Pradeepkumar [a, *]

[a] Department of Tamil, Nandha Arts and Science College (Autonomous) Erode-638052, Tamil Nadu, India

* Corresponding Author: pradeep.manokaran@gmail.com

Received: 17-04-2024
Revised: 30-07-2024
Accepted: 08-08-2024
Published: 15-08-2024

Check for updates

**ABSTRACT**

Men and women have separate levels of value in society. From ancient times, men were held in high esteem because of their physical strength and their ability to earn money. The idea that woman is not equal to man is still prevalent. Since women have been subservient to men from time immemorial, the aim and function of feminism is to make them aware and give them equal respect as men. A woman is a benevolent woman who gives birth and nurtures life and loves others. However, the suppression and suppression of women and femininity in society is widespread. In this way, Vairamuthu examines what Vairamuthu says about women through his poems.

**Keywords:** Vairamuthu, Woman, Poems, Feminism

## முன்னுரை

சமுதாயத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் தனித்தனி மதிப்பு நிலைகள் நிலவுகின்றன. பழங்காலந் தொட்டே உடல் வலிமையினாலும் பொருள் ஈட்டும் திறமையினாலும் ஆண்கள் உயர்வாகக் கருதப்பட்டனர். பெண் ஆணுக்குச் சமமானவள் அல்ல என்ற எண்ணம் இன்றும் மேலோங்கி இருக்கின்றது. பெண்கள் காலம் காலமாக ஆண்களுக்கு அடங்கி நடப்பவர்களாக இருந்துள்ளமையால் அவர்களுக்கு விழிப்புணர்வு அளித்து, ஆண்களுக்கு இணையான மதிப்பினைப் பெற்றுத் தருவது பெண்ணியத்தின் நோக்கமும் செயற்பாடும் ஆகும்.

## பெண்ணியம் விளக்கம்

'பெண்ணியம்' என்ற சொல் ஆங்கிலத்தில் 'குநஅinளைஅ' என்று கூறப்படுகின்றது. பெமினிசம் என்ற சொல்லுக்குத் தமிழில் பெண்ணியம், பெண்ணிலைத்துவம், பெண்ணிலை ஏற்பு, மகளிரியல், பெண்ணியக் கொள்கை என்ற வழங்கப்படுகின்றது. "பெண்ணியம் என்ற சொல் வழக்கில் நிலைப்பெற்று விட்டது என்பதாலும் கருத்துக் குழப்பத்திற்கு இடம் தராமல் தெளிவாக உள்ளதாலும், பெண்ணியம் என்ற சொல்லையே 'பெமினிசம்' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் இணைச் சொல்லாக வழங்கலாம். எனவே, பெண்ணியம் என்பதே பொருத்தமானக் கலைச் சொல் ஆகும்" என்று இரா. பிரேமா கூறியுள்ளார்.

ஆக்ஸ்போர்டு அகராதி 'பெமினிசம்' என்ற சொல்லுக்குப் பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது என்ற பொருளைத் தந்துள்ளது"

சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலத் தமிழ் பேரகராதியில் 'குநஅinளைஅ என்பதற்குப் "பெண் உரிமை ஏற்புக் கோட்பாடு' 'பெண்ணுரிமை ஆதரவு' கூறுவது பொருத்தமுடையதாகும்" என்று கூறப்பட்டுள்ளது.

## இலக்கியத்தில் பெண்கள்

சங்க காலத் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியம் பெண்ணுக்குரியப் பண்புகளாக,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற்குரிய வென்ப"

என்று கூறியிருக்கின்றது. அதே போன்று, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளிலும் பெண்மையின் மாண்பு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

என்றும்,

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

"பெண்ணிற் பெருந்தக யாவுள கற்பென்னும்

திண்மையுண் டாகப் பெறின்"

எனவும் வள்ளுவம் கூறுவதிலிருந்து குடும்பம், கற்பு இரண்டும் பெண்ணிற்குத் தேவையான பண்புகளாக வலியுறுத்துவதை அறிய முடிகிறது. சிலப்பதிகாரத்தில் பெண்மையின் சிறப்பை உலகுக்கு உணர்த்தும் வகையில் இளங்கோவடிகள் மூன்று கொள்கையில் இரண்டாவது கொள்கையாக,

"உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்"

என்று கூறியிருப்பது பெண்மைக்குச் சிறப்பு சேர்ப்பதாக அமைகின்றது.

தேசிய போராட்டத்தில், தீவிரமாகப் பங்கேற்ற பாரதியார் பெண் கல்வி, பெண்விடுதலை குறித்து எழுதிய கவிதைகள் தமிழ் இலக்கியத்தின் பெண்ணியக் கூறுகளை அறிவதற்கானச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

"மாதர் தம்மை இழிவு செய்யும்

மடமை யைக்கொ ளுத்துவோம்"

என்று முழங்கிய பாரதியின் வீறுகொண்ட எழுச்சி முழக்கம் கவிதை வரலாற்றில் நிலைத்த இடத்தைப் பெற்றுள்ளது. மேலும்,

"பெண்மைக்கு விடுதலைநீ ரில்லை யென்றால்

பின்னிந்த வுலகிலே வாழ்க்கை யில்லை""

என்ற பெண்மையை உயர்த்திப் பாடுவதில் புரட்சிக் கொண்டவராக பாரதி திகழ்ந்திருந்தார் என்பதையும் அறியமுடிகிறது.

திரு.வி. கல்யாணசுந்தரனார் பெண்மையைப் பெருமைப்படுத்தும் வகையில், "இன்னுஞ் சரித்திரத்தில் சில பெண்மக்கள் அருஞ்செயல்கள் பேசப்படுகின்றன. அரசிகளாகச் சிலர் இருந்தனர். வீரத்தாய்மார்கள் சிலர் இருந்தனர். அறுநூறு, எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நமது நாட்டில் வசித்த இராசபுத்திரிகள் போர்முகத்தில் காட்டிய வீரச் செயல்கள் சரித்திரத்தில் பதிந்து கிடக்கின்றன"10 என்று கூறியிருக்கின்றார்.

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பெண்ணின் சிறப்பைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல

மாதவம் செய்திடல் வேண்டுமம்மா

பங்கயக் கைநலம் பார்த்தலவோ பாரில் அறங்கள் செழிக்குதம்மா"

என பாடி பரவசப்படுத்துகின்றார்.

## பெண்ணியச் சிக்கல்கள்

சமுதாயத்தில் மனித இனத்தின் தோற்றத்திற்கும் அதன் பல்வேறு செயற்பாடுகளுக்கும் பெண்கள் அடிப்படைக் காரணங்களாக அமைகின்றனர். பெண்களுக்குக் குடும்பத்தின் மூலமாகவும் சமூகத்தின் வாயிலாகவும் சிக்கல்கள் உருவாகிய வண்ணமே உள்ளன. வைரமுத்துவின் கவிதைகளில் காணலாகும் பெண்ணியச் சிக்கல்களை

1. குடும்பச் சிக்கல்கள்
2. சமூகச் சிக்கல்கள்

என்ற இரண்டு நிலைகளில் பகுத்து ஆராயலாம்.

## குடும்பச் சிக்கல்கள்

குடும்பத்தில் வீட்டுப்பணி, குழந்தை வளர்ப்பு, பாதுகாப்பு முதலியனவற்றில் பெண்ணின் உழைப்பு முக்கியக் காரணியாக உள்ளது. பெண் ஏற்கும் வாழ்க்கையில் பணிப்பகிர்வானது தாய், மனைவி, மருமகள் என்னும் மூன்று நிலைகளில் உறுதி செய்யப்படுகின்றது. பெண் தாயாகவும், தாரமாகவும் குடும்பத்தில் இருந்து செயலாற்றி வருகின்றாள். ஆணின் இன்பங்களிலும், துன்பங்களிலும் பங்கேற்கிறாள். பொருளாதாரத்தில் சிக்கல் ஏற்படும் போதும் அதனை ஏற்று, அதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதிலும் முனைப்பாக இருக்கின்றாள்.

இன்றைய சூழலில் திருமணத்திற்குத் தேவையான பொருள்களைத் தானே தேடிக்கொள்கின்ற நிலை பெண்ணுக்கு உருவாக்கப்பட்டுள்ளது. வரதட்சணை கொடுக்க முடியாத நிலையில் கணவனால் கைவிடப்படும் நிலைக்கும் தள்ளப்படுகின்றாள். இவ்வாறு பல்வேறு நிலைகளில் துன்பங்களுக்கு ஆளாகும் பெண்ணியச் சிக்கல்களை வைரமுத்து தமது கவிதைகளில் பலவாறு எடுத்துரைத்துள்ளார்.

1. தாய்மையின் துயரம்
2. இல்லறத்தில் பெண்களின் நிலைமை
3. நாட்டுப்புற பெண்களின் அவல நிலை
4. திருமணத்திற்கு ஏற்படும் தடைகள்
5. கைம்பெண்ணின் துன்பங்கள் என்னும் பொருண்மைகளில் காணமுடிகிறது.

## தாய்மையின் துயரம்

'தாய்மை' என்பது மாதர் குலம் பெற்ற மகத்தான பேறாகும். தாயைத் தெய்வமாகப் போற்றும் நாடு நம் நாடாகும். தாய்மையில் உள்ள பற்றின்

பெற்றோரின் மனநிலை

மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாய் அமைந்து நிற்பவர்கள் பெண்களே என்பதைப் பல்வேறு சிந்தனையாளர்கள் உணர்த்தியுள்ளனர். எனினும் பெண்ணடிமை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதே தவிர குறையவில்லை. இன்றைய சமுதாய அமைப்பில் வரதட்சணைக் கொடுமை என்பது பெண்ணினத்திற்கு எதிராக எழுந்துள்ள மிகப் பெரிய சிக்கலாய் விளங்குகின்றது என்றாலும், இன்றைய நிலையில் பெற்றோர்கள் மகளின் ஊதியத்தைக் கண்டு அவர்களின் திருமணத்தைத் தாமதப் கன்னிப் பெண்ணின் நிலையை வைரமுத்து, படுத்துகின்றனர்.

'ஏக்கம் வரும்

நெஞ்சில் ஃ வீக்கம் வரும்

கன்னியாய் இருப்பதே மிச்சம்!"

என்ற கவிதை வரிகளில் பருவம் அடைந்தும் திருமணம் நடைபெறாமல் இருக்கின்ற கன்னிப் பெண்ணின் மனதில் இருக்கும் நோக்கங்களையும் அவளின் மனநிலையிலிருந்து சுட்டியுள்ளார். பெண்ணானவள் தன் பெற்றோரால் நிலையைக் கூற விழையும் வைரமுத்து, ஏக்கங்களையும் கூண்டுக்குள் அடைப்பட்டிருக்கும்

"கல்யாணத்துறவு பூண்டு

பெற்றோருக்கு

முதல் தேதி அமுத சுரபிகளாய்

வாழ்ந்து கொண்டு

இன்னும் நம்மிடையே

எத்தனை மணிமேகலை?

என்பதிலிருந்து பெண்ணின் சம்பளத்தை மையமாகக் தம்முடனே வைத்துக் கொள்ளத் துடிக்கும் நிலையைக் கொண்டு அவளைத் கூறியிருக்கின்றார். பிருந்தாவனமாக இருந்த பெற்றோரின் மனது இப்போது பாலைவனமாய் மாறி விட்டது என்பதை கி.சு. கிருஷ்ணசாமி என்பார் தமது கவிதை வரிகளில் கூறியுள்ளார். வைரமுத்துவைப் போல இவரும்,

"அந்த

சகோதரிகள் பிறந்த போது

பிருந்தாவனமான

பெற்றோரின் மனது

அவர்கள் பூப்பெய்தியதும்

பாலை வனமாகிவிட்டது

என்று பெற்றோரின் நிலையைக் காட்டுகிறார்.

மேலும் திருமண வாழ்க்கை அமையாமல் நாளுக்கு நாள் தள்ளிப் போகும் நிலையைக் கண்டு மனம் வெதும்பும் ஒரு பெண்ணின் மனநிலையைக் கூற விரும்பும் வைரமுத்து,

"முன்பெல்லாம்.....

கனவுகளுக்காகவே

சட்டென்று தோன்றி

ஞாபகத்தில் இருக்கிறது"

## முடிவுரை

குடும்பச் சிக்கல்களில் தாய்மையுறும் போது பெண் படுகின்ற வேதனைகளும் இல்லறத்தில் அவளின் பங்களிப்பும் வறுமையில் வாடுகின்ற நாட்டுப்புறப் பெண்களின் நிலையும் வரதட்சனையின் காரணமாக முதிர்கன்னிகள் படுகின்ற துயரநிலை, கணவனை இழந்த பெண்ணொருத்தி படுகின்ற வேதனைகள், முதுமையில் தனிமை ஏற்படுத்துகின்ற வெறுப்பையும் மறுமணம் புரிய எடுத்துக் கூறிய சீரியக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன. மேலும் சமூகச் சிக்கல்களில் பணிக்குச் செல்லும் பெண்கள் பேருந்துகளிலும், குழந்தையை வளர்ப்பதிலும், அலுவலகங்களில் உயர் அதிகாரிகளால் படுகின்ற பாலியல் கொடுமைகளும் சுட்டிக்காட்டப்பட்டு, ஊடகத்துறையில் பெண்கள் போகப் பொருளாகக் காட்டப்படுவதையும் வன்மையாகக் கண்டித்துக் கவி புனைந்துள்ளதைக் காணமுடிகின்றது. பெண்களுக்குச் சீர்திருத்தம் வேண்டும் என்ற கோரிக்கையைச் சுட்டிக்காட்டி கவிஞர் விடுதலைக் குரலை எழுப்பியிருப்பதையும் இவ்வியலில் காணமுடிகின்றது.

## References


பிரேமா, இரா. (1994) பெண்ணியம் அணுகுமுறைகள், உலக தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி சென்னை

இராமலிங்கம் பிள்ளை, வெ. (2010), திருக்குறள் உரையும், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு

மாணிக்கவாசகன், ஞா. (1995, சிலப்பதிகாரம், ஜார்ஜ் டவுன், சென்னை, தமிழ்நாடு

லட்சுமணன், இ. (2019) பாரதியார் கவிதைகள், திருமகள் நிலையம் தி. நகர், சென்னை, தமிழ்நாடு

கல்யாணசுந்தரனார், திரு.வி. பெண்ணின் பெருமை. திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, (1960) மலரும் மாலையும், பாரி நிலையம் சென்னை, தமிழ்நாடு


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author's 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License